ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவதரியாச்ரமம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருவதரியாச்ரமம்

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த$_3$யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்$_3$ய பூ$_4$ஷணம் ।
ஸ்ரீமத்$_3$வேங்கடநாதா$_2$ர்யம் வந்தே$_3$ வேதா$_3$ந்ததே$_3$ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த$_3$யாபாத்ரம் தீ$_4$ப$_4$க்த்யாதி$_3$கு$_3$ணார்ணவம் ।
யதீந்த்$_3$ரப்ரவணம் வந்தே$_3$ ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத$_2$ஸமாரம்பா$_4$ம் நாத$_2$யாமுநமத்$_4$யமாம் ।
அஸ்மதா$_3$சார்யபர்யந்தாம் வந்தே$_3$ கு$_3$ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா$_3$ம்பு$_3$ஜயுக்$_3$மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி$_3$தராணி த்ரு’ணாய மேநே ।
அஸ்மத்$_3$கு$_3$ரோர்ப$_4$க$_3$வதோஸ்ய த$_3$யைகஸிந்தோ$_4$:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்$_3$யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ$_4$தி:
ஸர்வம் யதே$_3$வ நியமேந மத$_3$ந்வயாநாம் ।
ஆத்$_3$யஸ்ய ந: குலபதேர்வகுளாபி$_4$ராமம்
ஸ்ரீமத் தத$_3$ங்க்$_4$ரியுக$_3$ளம் ப்ரணமாமி மூர்த்$_4$நா ॥ **5** ॥

பூ$_4$தம் ஸரஶ்ச மஹதா$_3$ஹ்வய ப$_4$ட்டநாத$_2$
ஸ்ரீப$_4$க்திஸார குலஶேக$_2$ர யோகி$_3$வாஹாந் ।
ப$_4$க்தாங்க்$_4$ரிரேணு பரகால யதீந்த்$_3$ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம: ।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ॥ **1.1.5** ॥

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ॥ **1.1.6** ॥

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.7** ॥

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.8** ॥

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.9** ॥

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ॥ **1.1.10** ॥

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ॥ **1.1.11** ॥

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ॥ **1.1.12** ॥

## பெரியாழ்வார் திருமொழி – தங்கையை மூக்கும்

‡ வட திசை மதுரை சாளக்கிராமம் ⋆
வைகுந்தம் துவரை அயோத்தி ⋆
இடம் உடை வதரி இடவகை உடைய ⋆
எம் புருடோத்தமன் இருக்கை ⋆
தடவரை அதிரத் தரணி விண்டிடியத் ⋆
தலைப்பற்றிக் கரை மரம் சாடி ⋆
கடலினைக் கலங்கக் கடுத்திழி கங்கைக் ⋆
கண்டம் என்னும் கடிநகரே ॥ **4.7.9** ॥

## பெரிய திருமொழி – முற்றமூத்து

‡ முற்ற மூத்துக் கோல் துணையா ⋆
முன் அடி நோக்கி வளைந்து ⋆
இற்ற கால் போல் தள்ளி மெள்ள ⋆
இருந்தங்கிளையா முன் ⋆
பெற்ற தாய் போல் வந்த பேய்ச்சி ⋆
பெரு முலை ஊடு ⋆

உயிரை வற்ற வாங்கி உண்ட வாயான் ⋆
வதரி வணங்குதுமே ‖ **1.3.1** ‖

முதுகு பற்றிக் கைத் தலத்தால் ⋆
முன் ஒரு கோல் ஊன்றி ⋆
விதிர் விதிர்த்துக் கண் சுழன்று ⋆
மேற் கிளை கொண்டிருமி ⋆
இதுவென் அப்பர் மூத்த ஆறென்று ⋆
இளையவர் ஏசா முன் ⋆
மது உண் வண்டு பண்கள் பாடும் ⋆
வதரி வணங்குதுமே ‖ **1.3.2** ‖

உறிகள் போல் மெய்ந் நரம்பெழுந்து ⋆
ஊன் தளர்ந்துள்ளம் எள்கி ⋆
நெறியை நோக்கிக் கண் சுழன்று ⋆
நின்று நடுங்கா முன் ⋆
அறிதி ஆகில் நெஞ்சம் அன்பாய் ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆
வெறி கொள் வண்டு பண்கள் பாடும் ⋆
வதரி வணங்குதுமே ‖ **1.3.3** ‖

பீளை சோரக் கண் இடுங்கிப் ⋆
பித்தெழ மூத்திருமி ⋆
தாள்கள் நோவத் தம்மில் முட்டித் ⋆
தள்ளி நடவா முன் ⋆
காளை ஆகிக் கன்று மேய்த்துக் ⋆
குன்றெடுத்தன்று நின்றான் ⋆

வாளை பாயும் தண் தடம் சூழ் ⋆
வதரி வணங்குதுமே ॥ **1.3.4** ॥

பண்டு காமர் ஆன வாறும் ⋆
பாவையர் வாய் அமுதம் ⋆
உண்ட வாறும் வாழ்ந்த வாறும் ⋆
ஒக்க உரைத்திருமி ⋆
தண்டு காலா ஊன்றி ஊன்றித் ⋆
தள்ளி நடவா முன் ⋆
வண்டு பாடும் தண் துழாயான் ⋆
வதரி வணங்குதுமே ॥ **1.3.5** ॥

எய்த்த சொல்லோடீளை ஏங்கி ⋆
இருமி இளைத்து ⋆
உடலம் பித்தர் போலச் சித்தம் வேறாய்ப் ⋆
பேசி அயரா முன் ⋆
அத்தன் எந்தை ஆதி மூர்த்தி ⋆
ஆழ் கடலைக் கடைந்த ⋆
மைத்த சோதி எம் பெருமான் ⋆
வதரி வணங்குதுமே ॥ **1.3.6** ॥

பப்ப அப்பர் மூத்த ஆறு ⋆
பாழ்ப்பது சீத் திரளை ஒப்ப ⋆
ஐக்கள் போத உந்த ⋆
உன் தமர் காண்மின் என்று ⋆
செப்பு நேர் மென் கொங்கை நல்லார் ⋆
தாம் சிரியாத முன்னம் ⋆

வைப்பும் நங்கள் வாழ்வும் ஆனான் ⋆
வதரி வணங்குதுமே ‖ **1.3.7** ‖

ஈசி போமின் ஈங்கிரேன்மின் ⋆
இருமி இளைத்தீர் ⋆
உள்ளம் கூசி இட்டீர் என்று பேசும் ⋆
குவளை அம் கண்ணியர் பால் ⋆
நாசம் ஆன பாசம் விட்டு ⋆
நல் நெறி நோக்கல் உறில் ⋆
வாசம் மல்கு தண் துழாயான் ⋆
வதரி வணங்குதுமே ‖ **1.3.8** ‖

புலன்கள் நைய மெய்யில் மூத்துப் ⋆
போந்திருந்துள்ளம் எள்கி ⋆
கலங்க ஐக்கள் போத உந்திக் ⋆
கண்ட பிதற்றா முன் ⋆
அலங்கல் ஆய தண் துழாய் கொண்டு ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆
வலம் கொள் தொண்டர் பாடி ஆடும் ⋆
வதரி வணங்குதுமே ‖ **1.3.9** ‖

‡ வண்டு தண் தேன் உண்டு வாழும் ⋆
வதரி நெடு மாலை ⋆
கண்டல் வேலி மங்கை வேந்தன் ⋆
கலியன் ஒலி மாலை ⋆
கொண்டு தொண்டர் பாடி ஆடக் ⋆
கூடிடில் நீள் விசும்பில் ⋆

அண்டம் அல்லால் மற்றவர்க்கு ⋆
ஓர் ஆட்சி அறியோமே ॥ **1.3.10** ॥

## பெரிய திருமொழி – ஏனமுனாகி

‡ ஏன முன் ஆகி இரு நிலம் இடந்து ⋆
அன்றிணை அடி இமையவர் வணங்க ⋆
தானவன் ஆகம் தரணியில் புரளத் ⋆
தடம் சிலை குனித்த என் தலைவன் ⋆
தேன் அமர் சோலைக் கற்பகம் பயந்த ⋆
தெய்வ நல் நறு மலர் கொணர்ந்து ⋆
வானவர் வணங்கும் கங்கையின் கரை மேல் ⋆
வதரி ஆச்சிராமத்துள்ளானே ॥ **1.4.1** ॥

கானிடை உருவைச் சுடு சரம் துரந்து ⋆
கண்டு முன் கொடுந் தொழில் உரவோன் ⋆
ஊனுடை அகலத்தடு கணை குளிப்ப ⋆
உயிர் கவர்ந்துகந்த எம் ஒருவன் ⋆
தேனுடைக் கமலத்தயனொடு தேவர் ⋆
சென்று சென்றிறைஞ்சிட ⋆
பெருகு வானிடை முது நீர்க் கங்கையின் கரை மேல் ⋆
வதரி ஆச்சிராமத்துள்ளானே ॥ **1.4.2** ॥

இலங்கையும் கடலும் அடல் அரும் துப்பின் ⋆
இரு நிதிக்கிறைவனும் ⋆ அரக்கர் குலங்களும்
கெடமுன் கொடுந் தொழில் புரிந்த கொற்றவன் ⋆
கொழுஞ்சுடர் சுழன்ற ⋆
விலங்கலில் உரிஞ்சி மேல் நின்ற விசும்பில் ⋆
வெண் துகில் கொடி என விரிந்து ⋆

வலம் தரு மணி நீர்க் கங்கையின் கரை மேல் ⋆
வதரி ஆச்சிராமத்துள்ளானே ‖ **1.4.3** ‖

துணிவினி உனக்குச் சொல்லுவன் மனமே ! ⋆
தொழுதெழு தொண்டர்கள் தமக்கு ⋆
பிணி ஒழித்தமரர் பெரு விசும்பருளும் ⋆
பேர் அருளாளன் எம் பெருமான் ⋆
அணி மலர்க் குழலார் அரம்பையர் துகிலும் ⋆
ஆரமும் வாரி வந்து ⋆
அணி நீர் மணி கொழித்திழிந்த கங்கையின் கரை மேல் ⋆
வதரி ஆச்சிராமத்துள்ளானே ‖ **1.4.4** ‖

பேய் இடைக்கிருந்து வந்த மற்றவள் தன் ⋆
பெரு முலை சுவைத்திட ⋆
பெற்ற தாய் இடைக்கிருத்தல் அஞ்சுவன் என்று தளர்ந்திட ⋆
வளர்ந்த என் தலைவன் ⋆
சேய் முகட்டுச்சி அண்டமும் சுமந்த ⋆
செம் பொன் செய் விலங்கலில் இலங்கு ⋆
வாய் முகட்டிழிந்த கங்கையின் கரை மேல் ⋆
வதரி ஆச்சிராமத்துள்ளானே ‖ **1.4.5** ‖

தேர் அணங்கல்குல் செழுங்கயற் கண்ணி திறத்து ⋆
ஒரு மறத் தொழில் புரிந்து ⋆
பார் அணங்கிமில் ஏறேழு முன் அடர்த்த ⋆
பனி முகில் வண்ணன் எம் பெருமான் ⋆
காரணம் தன்னால் கடும் புனல் கயத்த ⋆
கரு வரை பிளவெழக்குத்தி ⋆

வாரணம் கொணர்ந்த கங்கையின் கரை மேல் ⋆
வதரி ஆச்சிராமத்துள்ளானே ॥ **1.4.6** ॥

வெந் திறல் களிறும் வேலை வாய் அமுதும் ⋆
விண்ணொடு விண்ணவர்க்கரசும் ⋆
இந்திரற்கருளி எமக்கும் ஈந்தருளும் ⋆
எந்தை எம் அடிகள் எம் பெருமான் ⋆
அந்தரத்தமரர் அடி இணை வணங்க ⋆
ஆயிர முகத்தினால் அருளி ⋆
மந்தரத்திழிந்த கங்கையின் கரை மேல் ⋆
வதரி ஆச்சிராமத்துள்ளானே ॥ **1.4.7** ॥

மான் முனிந்தொரு கால் வரி சிலை வளைத்த மன்னவன் ⋆
பொன் நிறத்துரவோன் ⋆
ஊன் முனிந்தவன் உடல் இரு பிளவா ⋆
உகிர் நுதி மடுத்து ⋆
அயன் அரனைத் தான் முனிந்திட்ட ⋆
வெந் திறல் சாபம் தவிர்த்தவன் ⋆ தவம் புரிந்துயர்ந்த
மா முனி கொணர்ந்த கங்கையின் கரை மேல் ⋆
வதரி ஆச்சிராமத்துள்ளானே ॥ **1.4.8** ॥

கொண்டல் மாருதங்கள் குல வரை தொகு நீர்க் ⋆
குரை கடல் உலகுடன் அனைத்தும் ⋆
உண்ட மா வயிற்றோன் ஒண் சுடர் ஏய்ந்த ⋆
உம்பரும் ஊழியும் ஆனான் ⋆
அண்டம் ஊடறுத்தன்றந்தரத்திழிந்து ⋆
அங்கவனியாள் அலமர ⋆

பெருகும் மண்டு மா மணி நீர்க் கங்கையின் கரை மேல் ⋆
வதரி ஆச்சிராமத்துள்ளானே ॥ **1.4.9** ॥

‡ வரும் திரை மணி நீர்க் கங்கையின் கரை மேல் ⋆
வதரி ஆச்சிராமத்துள்ளானை ⋆
கரும் கடல் முன் நீர் வண்ணனை எண்ணிக் ⋆
கலியன் வாய் ஒலி செய்த பனுவல் ⋆
வரம் செய்த ஐந்தும் ஐந்தும் வல்லார்கள் ⋆
வானவர் உலகுடன் மருவி ⋆
இரும் கடல் உலகம் ஆண்டு வெண் குடைக் கீழ் ⋆
இமையவர் ஆகுவர் தாமே ॥ **1.4.10** ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த – சிறிய திருமடல்

பாரோர் புகழும் வதரி வடமதுரை ⋆
ஊராய எல்லாம் ஒழியாமே நான் அவனை ⋆
ஓர் ஆனை கொம்பொசித்தோர் ஆனை கோள்விடுத்த சீரானை ⋆
செங்கண் நெடியானைத் தேன் துழாய்த் தாரானை ⋆
தாமரை போல் கண்ணானை ॥ **38** ॥

**திரு அரவிந்தவல்லி சமேத பதரீநாராயணன் திருவடிகளே சரணம்**